# கள்ளக்குறிச்சி நகராட்சி

## <u>நகர் மன்ற சாதாரணக் கூட்டம்</u>

"இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு" குறள்...

**<u>கூட்டம் எண். 07/2023</u>** **<u>நாள். 26.09.2023</u>**

கள்ளக்குறிச்சி நகராட்சியின் நகர் மன்ற சாதாரணக் கூட்டம் எதிர்வரும் 29.09.2023 ஆம் தேதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு நகர் மன்ற தலைவர் தலைமையில், நகராட்சி நகர் மன்ற கூட்ட அரங்கில் நடைபெறவுள்ளது. அச்சமயம் நகர் மன்ற துணை தலைவர் மற்றும் நகர் மன்ற உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டுமாய் அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**<u>நகர் மன்ற தலைவர்</u>**
**கள்ளக்குறிச்சி நகராட்சி**

## <u>கூட்டபொருள்கள்</u>

**<u>பொருள் எண். 01</u>**

கள்ளக்குறிச்சி நகராட்சியில் புதிய நகராட்சி அலுவலக கட்டடம் கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.01-ல் பசுங்காயமங்களம் சாலை பகுதியில் சர்வே எண் 49/6 ல் அமைக்க தேர்வு செய்யப்பட்டுள்ள இடத்திற்கு மண் பரிசோதனை (Soil Test) செய்தல் மற்றும் 15வது நிதிக்குழு மான்யம் நிதி (சுகாதார மான்யம்) 2023-2024-ன் கீழ் புதிய நகர்புற சுகாதார மையம் ரூ.120.00 இலட்சம் மதிப்பீட்டில் வார்டு எண்.07-ல் சங்கராபுரம் சாலை பகுதியில் சர்வே எண்.127-ல் அமைக்கப்படவுள்ள இடத்திற்கு மண் பரிசோதனை (Soil Test) செய்து அவற்றின் அறிக்கை வழங்க கோரியதற்கு கட்டணமாக தலா ரூ.14,160/- வீதம் மொத்தம் ரூ.28,320/-ஐ செலுத்த வேண்டி அரசு பொறியியல் கல்லூரி, கருப்பூர் சேலம் அவர்களிடமிருந்து பட்டியல் வரப்பெற்றுள்ளது. மேற்படி கட்டணம் செலுத்தி மேற்காணும் பகுதியில் மண் பரிசோதனை அறிக்கைகள் பெறப்பட வேண்டியுள்ளது.

எனவே மேற்படி கட்டணம் ரூ28,320/-(ரூபாய் இருபத்தி எட்டாயிரத்தி மூன்னுற்று இருபது மட்டும்)-க்கும், மேற்கண்ட செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>:-

1. மன்றம் அனுமதிகலாம்.
2. தொகையினை வருவாய் நிதியிலிருந்து செலுத்தவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 581 / 2022 / இ1)

## பொருள் எண். 02

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்–10, சர்வே எண். 209/1B2, 5A, 210/1, 211/1B2, 213/2A–ல் விநாயகா நகரில் நகராட்சிக்கு சொந்தமான பூங்கா உள்ளது. இப்பூங்கா கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் 2022–2023–ன் கீழ் ரூ. 68.00 இலட்சம் மதிப்பீட்டில் மேம்பாடு செய்யப்பட்டுள்ளது.

இப்பூங்காவில் சிறுவர்களுக்கான விளையாட்டு உபகரணங்கள், திறந்தவெளி உடற்பயிற்சி சாதனங்கள் அமைக்கப்பட்டுள்ளன மேலும் பெரியவர்களுக்கான நடைப்பயிற்சி அமைப்புகளும் செய்யப்பட்டுள்ளன. இப்பூங்காவில் உட்பகுதியில் தரைப்பகுதிகள் சமதளமின்றி மேடு பள்ளமாக உள்ளது. இதனால் சிறுவர்கள் மற்றும் பெரியவர்கள் இப்பூங்காவினுள் வந்து செல்லவும் விளையாடவும் மிகவும் சிரமமேற்படும் என்பதால் மேற்படி பூங்காவில் மேடு பள்ளமா உள்ள இடத்தினை சமன் செய்து ஆற்று மணல் நிரப்பி பயன்பாட்டிற்கு உகந்ததாக இருக்கும்.

மேலும் பூங்காவை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படவுள்ள நிலையில் பூங்காவின் உட்பகுதியில் மேடு பள்ளமா உள்ள இடத்தினை சமன் செய்து ஆற்று மணல் நிரப்பி பயன்பாட்டிற்கு கொண்டு வர தயார் செய்யப்பட்டுள்ள தோராய மதிப்பீடு தொகை ரூ.8,95,000/–(ரூபாய் எட்டு இலட்சத்து தொன்னுற்று ஐந்தாயிரம் மட்டும்)–க்கும், இப்பணிக்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்து பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:–</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 2350 / 2023 / இ1)**

## பொருள் எண். 03

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.01 முதல் 21வரையிலான பகுதிகளில் சேதமடைந்த நிலையில் உள்ள தார்சாலைகளை நகர்புர சாலைகள் மேம்பாட்டு திட்டம் 2023–2024ன் கீழ் மறுசீரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளது. இச்சாலைகளில் 14எண்ணிக்கையிலான சாலைகள் மிகவும் சேதமடைந்து குண்டும், குழியுமாக உள்ளதால் இச்சாலைகளில் தார் செப்பனிடும் போது போதுமான உறுதி தன்மையின்றி மீண்டும் சாலைகள் பழுதுகள் ஏற்பட்டு சேதமடையும். எனவே மேற்படி மிகவும் சேதமடைந்து குண்டும் குழியுமாக உள்ள சாலைகளில் Wet Mix Mecadam Patch Work செய்து அதன் மீது தார் செப்பனிடும் பணிகள் மேற்கொண்டால் சாலைகள் உறுதியானதாக இருக்கும் என்பதால் மேற்படி சாலைகளில் Wet Mix Mecadam Patch Work செய்யப்பட வேண்டியது மிகவும் அவசியமாகிறது.

எனவே மேற்படி பணி மேற்கொள்ள தயார் செய்யப்பட்டுள்ள தோராய மதிப்பீடு தொகை ரூ.14,00,000/–(ரூபாய் பதின்நான்கு இலட்சம் மட்டும்)–க்கு, இப்பணிக்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்து பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:–</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 2353 / 2023 / இ1)**

**<u>பொருள் எண். 04</u>**

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்–20ல் அமைந்துள்ள ஏமப்பேர் குளத்தினை கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் 2021–2022ன் கீழ் ரூ.121.00 இலட்சம் மதிப்பீட்டில் மேம்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு தற்போது பணிகள் முழுவதும் முடிக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர தயார் நிலையில் உள்ளது. மேற்படி குளத்தின் முன்புறம் உள்ள அணுகு பாதை மண்பாதையாக குண்டும் குழியுமாகவும், மிகவும் பழுதடைந்து உள்ளது. மேலும் இப்பாதை மழைகாலங்களில் சேரும் சகதியுமாக ஏற்படும் நிலையில் உள்ளது. இதனால் ஏமப்பேர் குளத்திற்கு பொதுமக்கள் பயன்பாட்டிற்கு மிகவும் சிரமமேற்படும். எனவே, மேற்படி பகுதியினை ஆய்வு செய்யப்பட்டதில் அப்பகுதியில் தாங்கு சுவருடன் கூடிய பேவர் பிளாக் சாலை அமைக்கப்பட வேண்டியுள்ளது. மேலும் இக்குளம் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படவுள்ளது. மேற்படி பணியின் அவசர அவசியத்தை கருதி மேற்குறிப்பிட்ட பணிகள் செய்யப்பட வேண்டியுள்ளது.

எனவே மேற்படி பணிகள் மேற்கொள்ள தயார் செய்யப்பட்டுள்ள தோராய மதிப்பீடு தொகை ரூ.4,50,000/–(ரூபாய் நான்கு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்)–க்கும், இப்பணிக்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்து பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:–</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 2255 / 2023 / இ1)

**<u>பொருள் எண். 05</u>**

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்10–ல் உள்ள துருகம் சாலை குறிஞ்சி மஹால் திருமண மண்டபத்தின் எதிரில் உள்ள பகுதியில் சுமார் 30 குடும்பங்கள் வசித்து வருகின்றனர். மேற்படி பகுதியில் உள்ள பொதுமக்களுக்கு தண்ணீர் வசதிகள் இல்லாமல் மிகவும் சிரமப்படுகின்றனர் பொதுமக்களின் தண்ணீர் தேவையை கருத்தில் கொண்டு மேற்படி பகுதியில் குடிநீர் வசதிகள் ஏற்படுத்தி தர 10 வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் அவர்களின் 01.09.2023–ம் தேதிய கடிதத்தில் கோரியுள்ளார். மேற்படிபகுதியை ஆய்வு செய்ததில் அருகில் உள்ள மினி பவர்பம்பு டேங்கிலிருந்து தண்ணீர் விநியோக குழாய்கள் அமைத்து தண்ணீர் வசதிகள் ஏற்படுத்தலாம்.

எனவே மேற்படி பணிகள் மேற்கொள்ள தயார் செய்யப்பட்டுள்ள தோராய மதிப்பீடு தொகை ரூ65,000/– (ரூபாய் ஆறுபத்தாயிரம் மட்டும்)–க்கும், மேற்கண்ட செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்து பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:–</u>

1. மன்றம் அனுமதிகலாம்.
2. தொகையினை குடிநீர் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 2073 / 2023 / இ2)

**பொருள் எண். 06**

கள்ளக்குறிச்சி நகராட்சி நகர்மன்ற தீர்மானம் எண்.86, நாள்.29.05.2023ல் நகராட்சி எல்லைக்குட்பட்ட 21 வார்டுகளில் உள்ள பழுதடைந்த சிமெண்ட் சாலைகளை பழுதுகள் நீக்கி பராமரிப்பு (Patch Work) பணிகள் ரூ.9.90 இலட்சம் மதிப்பீட்டில் நகராட்சி வருவாய் நிதியின் கீழ் மேற்க்கொள்ளும் பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியில் மதிப்பீட்டை விட குறைந்த ஒப்புந்தப்புள்ளிகள் வழங்கிய திரு.J.முஸ்தபா, கள்ளக்குறிச்சி என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க அனுமதிக்கப்பட்டு 01.06.2023ல் பணி உத்தரவு வழங்கப்பட்டது.

தற்போது நகர்புற சாலைகள் மேம்பாட்டு திட்டம் 2023-2024ன்கீழ் கள்ளக்குறிச்சி நகராட்சி பகுதிகளில் சேதமடைந்த நிலையில் உள்ள சிமெண்ட் சாலைகளை மறுசீரமைப்பு பணிகள் ரூ.320.00இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ள உள்ளது,

எனவே, கள்ளக்குறிச்சி நகராட்சி ஆணையர் மற்றும் நகர்மன்ற தலைவர் அவர்களின் 06.06.2023ம் தேதிய அறிவுரையில் மேற்படி வருவாய் நிதியின் கீழ் சிமெண்ட் சாலைகளை பழுதுகள் நீக்கம் செய்யும் பணிக்கு பதிலாக கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட 19வது வார்டு பகுதியில் காட்டு கொட்டகை தெருவில் 15வது நிதிகுழு மான்யம்(Untied Grant) 2022-2023 கீழ் தார்சாலைகளை மறுசீரமைப்பு பணிகள் மேற்கொள்ளும் சாலை பகுதிகளில் மழைநீர் வடிகால்கள் சேதமடைந்து உள்ளதால் அதனை அகற்றி புதிய மழைநீர் வடிகால் வசதிகள் அமைக்கும் பணியினை அதே மதிப்பீட்டில் மேற்கொள்ள அறிவுறுத்தியுள்ளனர்.

எனவே, கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட 19வது வார்டு காட்டு கொட்டகை தெரு பகுதியில் சேதமடைந்த நிலையில் உள்ள மழைநீர் வடிகால்களை அகற்றி புதிய மழைநீர் வடிகால் வசதிகள் அமைக்கும் பணியினை வருவாய் நிதியில் கீழ் வேலை உத்தரவு வழங்கப்பட்ட திரு.J.முஸ்தபா, கள்ளக்குறிச்சி என்ற ஒப்பந்ததாரர் மூலம் ரூ.9.90இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட 19வது வார்டு பகுதியில் காட்டு கொட்டகை தெருவில் 15வது நிதிகுழு மான்யம் (Untied Grant) 2022-2023 கீழ் தார்சாலைகளை மறுசீரமைப்பு பணிகள் மேற்கொள்ளும் சாலை பகுதிகளில் மழைநீர் வடிகால்கள் சேதமடைந்து உள்ளதால் அதனை அகற்றி புதிய மழைநீர் வடிகால் வசதிகள் அமைக்கும் பணியினை வருவாய் நிதியில் கீழ் வேலை உத்தரவு வழங்கப்பட்ட திரு.J.முஸ்தபா, கள்ளக்குறிச்சி என்ற ஒப்பந்ததாரர் மூலம் ரூ.9.90இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
3. மேற்படி பணிக்கான தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 1819 / 2023 / இ1)

## பொருள் எண். 07

கள்ளக்குறிச்சி நகராட்சியில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் 2021-2022ன் கீழ், ரூ.115.00இலட்சம் மதிப்பீட்டில் சீத்தாராம் நகர் பூங்கா பகுதியில் நூலகம் மற்றும் அறிவுசார் மையம் கட்டம் கட்டப்பட்டு தற்போது பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். 001/202/வஅ1, நாள். 12.05.2023ல் நகராட்சிகளில் அறிவுசார் மையம் மற்றும் நூலகம் அமைக்கும் பணிகள் பல்வேறு நிலைகளில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டுள்ளது. மேலும் நூலகம் மற்றும் அறிவுசார் மையத்திற்கு தேவையான மேசை நாற்காலிகள், புத்தக அலமாரிகள் மற்றும் பிற வசதிகள் ஏற்படுத்திட தேவையானவற்றை நகராட்சி நிதி மற்றும் 15வது நிதிக்குழு மான்யம் நிதி திட்டம் ஆகியவற்றில் உரிய விதிமுறைகளை பின்பற்றி கொள்முதல் செய்துக்கொள்ள அறிவுறுத்தப்பட்டது.

அதனடிப்படையில், மேற்படி நூலகம் மற்றும் அறிவுசார் மையத்திற்கு தேவையான மேசை நாற்காலிகள் மற்றும் அலமாரிகள் ஆகியவற்றை கொள்முதல் செய்ய 15வது நிதிக்குழு மான்யம் நிதியின் கீழ் கொள்முதல் செய்திட M/s The Dindigul Lock. Hardware and Steel Furniture Workers Industrial Coolperative Society Ltd, Dindigul என்ற நிறுவனத்தாருக்கு 22.06.2023ல் கொள்முதல் உத்தரவு வழங்கப்பட்டு மேசை நாற்காலிகள், புத்தக அலமாரிகள் மற்றும் பிற வசதிகள் ஏற்படுத்தப்பட்டு அப்பணிக்கான செலவுத் தொகை ரூ.16,03,030/-க்கு பட்டியல் மேற்படி நிறுவனத்தாரிடமிருந்து வரப்பெற்றுள்ளது.

கள்ளக்குறிச்சி நகராட்சியில் 15வது நிதிகுழு மான்யம் 2022-2023ம் ஆம் ஆண்டிற்கான வரையறுக்கப்பட்ட நிதிக்கு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், வேலூர் அவர்களின் செயல்முறை உத்தரவு கடித ந.க.எண்.5158/2021/ஆ, நாள்.16.03.2023ல் Untied Grand கீழ் ரூ.59.00இலட்சத்திற்கு தார் சாலைகள் அமைக்கும் பணிகள் மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டது. எனவே தற்சமயம் 15வது நிதிகுழு மான்யம் 2022-2023ம் நிதியில் செலவினம் மேற்கொள்ள வழிவகை இல்லாததால் கொள்முதல் செய்யப்பட்டதற்கு நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து செலவினம் வழங்கப்பட வேண்டியுள்ளது.

எனவே மேற்படி கொள்முதல் செய்யப்பட்டதற்கு ரூ.16,03,030/-(ரூபாய் பதினாறு இலட்சத்து மூன்னுற்று முற்பது மட்டும்)-க்கு, இப்பணிக்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்து தொகை வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. 15வது நிதிகுழு மான்யம் 2022-2023ம் ஆம் ஆண்டிற்கான வரையறுக்கப்பட்ட நிதிக்கு பணிகள் தேர்வு செய்யப்பட்டு பணிகள் மேற்கொண்டு முடிக்கப்பட்டதால் M/s The Dindigul Lock. Hardware and Steel Furniture Workers Industrial Coolperative Society Ltd, Dindigul என்ற நிறுவனத்தாருக்கு பட்டியல் படி தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 1198 / 2023 / இ1)

## பொருள் எண். 08

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட ஏமப்பேர் குளத்தினை கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் 2021-2022ன் கீழ் ரூ.121.00 இலட்சம் மதிப்பீட்டில் மேம்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு தற்போது பணிகள் முழுவதும் முடிக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர தயார் நிலையில் உள்ளது. மேற்படி குளத்தில் பொதுமக்கள் பொழுது போக்கிற்காக நகராட்சியால் படகு சவாரி செய்வதற்கு வசதிகள் ஏற்படுத்தப்பட்டு வருகிறது. எனவே மேற்படி குளத்தில் வறட்சி காலங்களில் தண்ணீர் வற்றிவிடும் என்பதால் இக்குளத்திற்கு தேவையான தண்ணீர் அருகில் உள்ள நகராட்சிக்கு சொந்தமான கரியப்பா நகர் திறந்த வெளி கிணற்றிலிருந்து தேவையான அளவு நீரினை குளத்திற்கு எடுத்து செல்லும் வகையில் மின் மோட்டார்கள் மற்றும் HDPE குழாய்கள் அமைக்கும் பணிகள் மேற்கொள்ள மேற்படி குளத்தை ஆய்வு செய்த நகர்மன்ற தலைவர் அவர்கள் அறிவுத்தியுள்ளார்.

எனவே மேற்படி பணிகள் மேற்கொள்ள தயார் செய்யப்பட்டுள்ள தோராய மதிப்பீடு தொகை ரூ7,85,000/-(ரூபாய் ஏழு இலட்சத்து என்பத்தாயிரம் மட்டும்)-க்கும், மேற்கண்ட செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்து பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-

1. மன்றம் அனுமதிகலாம்.
2. தொகையினை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 2254 / 2023 / இ2)

## பொருள் எண். 09

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்-05ல் உள்ள ராஜா நகர் திரையரங்கம் பின்புறம் உள்ள சிமெண்ட் சாலை மிகவும் பழுதடைந்து போக்குவரத்திற்கும் பொதுமக்களுக்கும் பயன்படுத்துவதற்கு மிகவும் சிரமமேற்படுகிறது. மேலும், இச்சாலையானது அமைக்கப்பட்டு சுமார் இருபது ஆண்டுகளுக்கு மேல் ஆவதால் இச்சாலையை சீரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. மேலும் இப்பகுதியில் மழைநீர் வடிகால் இன்றி உள்ளதால் இப்பகுதியில் மழைகாலங்களில் மழைநீர் ஆங்காங்கே தேங்கி அப்பகுதி பொதுமக்களுக்கு சுகாதார சீர்கேடு ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே மேற்படி பகுதியினை ஆய்வு செய்யப்பட்டதில் அப்பகுதியில் மழைநீர் வடிகாலுடன் கூடிய சிமெண்ட் சாலை அமைத்தால் பொதுமக்களுக்கு, போக்குவரத்திற்கும் உகந்ததாக அமையும் என்பதால் மேற்படி பணியினை மேற்கொள்ள வேண்டியது மிகவும் அவசியமாகிறது.

எனவே மேற்படி பணி மேற்கொள்ள தயார் செய்யப்பட்டுள்ள தோராய மதிப்பீடு தொகை ரூ.4,45,000/-(ரூபாய் நான்கு இலட்சத்து நாற்பத்தி ஐந்தாயிரம் மட்டும்)-க்கு, இப்பணிக்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்து பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 2352 / 2023 / இ1)

**பொருள் எண். 10**

கள்ளக்குறிச்சி நகராட்சியில், வருவாய் நிதி மற்றும் குடிநீர் நிதி 2023-2024ன் கீழ், கீழ்க்காணும் பணிகள் மேற்கொள்வதற்கு 18.08.2023-ம் தேதி அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விவரத்தினை மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண். 19 & 20ல் WMM பேட்ஜ் ஒர்க் செய்தல் | ரூ. 15,00,000/- | திரு. A.K.இளையாழ்வார், கள்ளக்குறிச்சி | 0.05% மதிப்பீட்டிற்கும் குறைவு |
| | | | திரு.J.மகேஷ்வரன், கள்ளக்குறிச்சி | 2.91% மதிப்பீட்டிற்கும் அதிகம் |
| 2. | கச்சேரி சாலை மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி வளாகத்தில் பொருட்கள் இருப்பு அறை கட்டுதல் | ரூ. 5,00,000/- | திரு. A.K.இளையாழ்வார், கள்ளக்குறிச்சி | 0.10% மதிப்பீட்டிற்கும் குறைவு |
| | | | திரு.J.மகேஷ்வரன், கள்ளக்குறிச்சி | 2.84% மதிப்பீட்டிற்கும் அதிகம் |
| 3. | அம்மா உணவகத்தில் பழுது நீக்க பணிகள் செய்தல் | ரூ. 1,00,000/- | திரு.A.சின்னதுரை, கள்ளக்குறிச்சி | 0.10% மதிப்பீட்டிற்கும் குறைவு |
| | | | திரு. N.செங்கோட்டையன், கள்ளக்குறிச்சி | 3.55% மதிப்பீட்டிற்கும் அதிகம் |
| 4. | கச்சிராயபாளையம் பிரதான சாலையில் அமைந்துள்ள சின்டெக்ஸ் டேங்க் தொட்டிகளை இடம் மாற்றம் செய்து குடிநீர் விநியோக குழாய்கள் அமைத்தல் | ரூ. 9,00,000/- | திரு. A.K.இளையாழ்வார், கள்ளக்குறிச்சி | 0.15 % மதிப்பீட்டிற்கும் குறைவு |
| | | | திரு.J.மகேஷ்வரன், கள்ளக்குறிச்சி | 3.81% மதிப்பீட்டிற்கும் அதிகம் |
| 5. | கள்ளக்குறிச்சி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 01, 02, 03, 10, 16, 17, 19 & 20 ஆகிய பகுதிகளில் 90mm PVC குடிநீர் விநியோக குழாய்கள் அமைத்தல் | ரூ. 14,50,000/- | திருமதி.M.சரோஜா கள்ளக்குறிச்சி | 0.16% மதிப்பீட்டிற்கும் குறைவு |
| | | | M/s. சக்தி கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், கள்ளக்குறிச்சி | 1.80% மதிப்பீட்டிற்கும் அதிகம் |
| 6 | கள்ளக்குறிச்சி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 01 முதல் 21 வரையுள்ள பகுதிகளில் 1¼" UPVC குழாய்கள் அமைத்தல் | ரூ. 7,50,000/- | M/s. சக்தி கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், கள்ளக்குறிச்சி | 0.15 % மதிப்பீட்டிற்கும் குறைவு |
| | | | திரு. A.K.இளையாழ்வார், கள்ளக்குறிச்சி | 3.81% மதிப்பீட்டிற்கும் அதிகம் |
| 7 | கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட கச்சிராயபாளையம் பிரதான சாலையில் குடிநீர் விநியோக குழாய்கள் அமைத்தல் | ரூ. 9,00,000/- | திருமதி. M.செல்லம்மாள், கள்ளக்குறிச்சி | 0.12% மதிப்பீட்டிற்கும் குறைவு |
| | | | M/s. செந்தூர் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், கள்ளக்குறிச்சி | 2.50% மதிப்பீட்டிற்கும் அதிகம் |

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று மன்றம் அனுமதிக்கலாம்.
3. மேற்படி பணிகளின் அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு குறைந்த ஒப்பந்தப்புள்ளிகள் வழங்கிய ஒப்பந்ததாரர்களுக்கு வேலை உத்தரவு வழங்கி பணிகள் மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.
4. மேற்படி பணிகளுக்கு வரப்பெறும் பட்டியல் படி தொகையினை நகராட்சி வருவாய் மற்றும் குடிநீர் நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 1782 / 2023 / இ1)

## பொருள் எண். 11

கள்ளக்குறிச்சி நகராட்சிக்கு 15வது நிதிக்குழு மான்ய திட்டம் (15th CFC-Tied Grant) 2022-2023ன் கீழ், கீழ்க்காணும் விவரப்படி உள்ள பணியினை மேற்கொள்வதற்கு, நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், வேலூர்-12 அவர்களின் செயல்முறைகள் உத்தரவு ந.க.எண். 5158/2021-1/ஆ2, நாள். 23.08.2023ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு, 13.09.2023ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில், மின்னனு (E-Tendering-ONLINE) முறையில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விவரத்தினை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை |
|---|---|---|---|---|
| 1. | Providing 90mm PVC 6 KSC Distribution Pipe Line at Kallakurichi Municpal Limit | ரூ. 9.34 இலட்சம் | திரு. A.K.இளையாழ்வார், கள்ளக்குறிச்சி | 0.09% மதிப்பீட்டைவிட குறைவு |
| | | | M/s. சக்தி கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், கள்ளக்குறிச்சி | 4.26% மதிப்பீட்டை விட அதிகம் |

மேற்கண்ட பணிக்கு மின்னனு முறையில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளியில் "திரு.A.K.இளையாழ்வார், கள்ளக்குறிச்சி" என்பவர் "0.09%" மதிப்பீட்டைவிட குறைவான விலை விகிதத்தில் ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளதை ஏற்று பணி உத்தரவு வழங்கப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. திட்டப்பணியின் அவசர, அவசியத்தினை கருதி, "0.09%" மதிப்பீட்டை விட குறைவான விலை விகிதம் அளித்துள்ள "திரு.A.K.இளையாழ்வார், கள்ளக்குறிச்சி" என்பவரின் ஒப்பந்தப் புள்ளியினை ஏற்று பணி உத்தரவு வழங்கப்பட்டதையு மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 1961 / 2023 / இ1)

**பொருள் எண். 12**

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.05ல் உள்ள காந்திரோடு R.K ரைஸ் மில் தெருவில் உள்ள சிமெண்ட் சாலை குடிநீர் குழாய் பதிக்கப்பட்டதாலும், கனரக வாகனங்கள் வந்து செல்வதாலும் இச்சாலையின் முகப்பில் கான்கிரட் தளம் பழுதடைந்தும், மழைநீர் வடிகாலின் பக்க சுவர் பகுதி இடிந்து விழுந்துள்ளது. இத்தெருவில் போக்குவரத்திற்கும் பொதுமக்களுக்கும் பயன்படுத்துவதற்கு மிகவும் சிரமமேற்படுகிறது. எனவே இச்சாலையில் ஒட்டுப்பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. மேலும் 05வது நகர்மன்ற உறுப்பினர் அவர்களின் 21.09.2023ம் தேதிய கடிதத்தில் மேற்படி சாலையினை சீரமைத்து தர வேண்டி கோரியுள்ளார். எனவே மேற்படி பகுதியினை ஆய்வு செய்யப்பட்டதில் சேதமடைந்த நிலையில் உள்ள சிமெண்ட் சாலையில் ஒட்டுப்பணிகள் மற்றும் மழைநீர் வடிகால் பக்க சுவர் அமைக்கும் பணியினை மேற்கொள்ள வேண்டியது மிகவும் அவசியமாகிறது.

எனவே மேற்படி பணிகள் மேற்கொள்ள தயார் செய்யப்பட்டுள்ள தோராய மதிப்பீடு தொகை ரூ.1,20,000/-(ரூபாய் ஒரு இலட்சத்து இருபதாயிரம் மட்டும்)-க்கு, இப்பணிக்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்து பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 2292 / 2023 / இ1)

**பொருள் எண். 13**

**வேலையின் பெயர் :-** கள்ளக்குறிச்சி பகுதியில் சேகரமாகும் எரியும் தன்மையுடைய மக்காத மற்றும் மறுசுழற்சிக்கு பயன்படுத்த இயலாத பிளாஸ்டிக் கழிவுகளை இறுதியாக்கம் செய்ய அரியலூர் சிமெண்ட் தொழிற்சாலைகளுக்கு லாரி மூலம் கொண்டும் செல்லும் பணிக்கு, பணியின் அவசர அவசியம் கருதி குறைந்த விலைப்புள்ளிகள் 01.08.2023 அன்று கோரப்பட்டதில் வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகள் விபரம் பின்வருமாறு

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒரு நடைக்கு தொகை ரூ. |
|---|---|---|
| 1 | **M/s.சக்தி கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், கள்ளக்குறிச்சி** | 12500.00 |
| 2 | M/s. J.K டிரேடர்ஸ், கள்ளக்குறிச்சி | 12750.00 |
| 3 | திரு.ஜே.முஸ்தபா, கள்ளக்குறிச்சி | 13050.00 |

அலுவலக குறிப்பு:-

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட 3 விலைப்புள்ளிகளில் வ.எண்.1 ல் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள M/s. **சக்தி கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், கள்ளக்குறிச்சி என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளியை** ஏற்று பணியின் அவசர அவசியம் கருதி முன்னனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்
3. பெறப்படும் பட்டியல் தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 1508/2023/எச்1)

## பொருள் எண். 14

அரசு முதன்மை செயலர் சென்னை அவர்களின் தலைமையில் மாவட்ட ஆட்சியர் கள்ளக்குறிச்சி அலுவலகத்தில் கடந்த 19.09.2023 அன்று காணொலி காட்சியின் மூலம் வடகிழக்கு பருவமழை தொடர்பாக நடைபெற்ற ஆய்வு கூட்டத்தில் தற்போது வடகிழக்கு பருவமழை தொடங்க உள்ளதால் மழைநீரால் கொசுக்கள் மூலம் பரவும் டெங்கு, சிக்கன்குனியா மற்றும் மர்மகாய்ச்சல் ஆகிய நோய்கள் பொதுமக்களுக்கு பாதிப்பு ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே, மேற்கண்ட நோய்கள் பொதுமக்களுக்கு பாதிப்பு ஏற்படாமல் கட்டுப்படுத்த தேங்கியுள்ள மழைநீரில் கொசுப்புழு உருவாவதை தடுக்க ஏதுவாக டெமிபாஸ் மருந்தும், முதிர் கொசுக்களை அழிக்க ஏதுவாக பைரித்ரம் 2% புகைமருந்தும், மழைநீர் வடிகால்களில் உருவாகும் கொசுக்களை அழிக்க B.T.பவுடர்கள் ஆகிய கிருமிநாசினிகள் போதிய அளவில் இருப்பில் வைத்து கொண்டு போர்கால அடிப்படையில் பணிகள் மேற்கொள்ள வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி மேற்கண்ட பணிகள் மேற்கொள்ள இந்நகராட்சி பொது சுகாதார பிரிவிற்கு தேவையான பைரித்ரம் 2%, டெமிபாஸ், பிளிச்சிங்பவுடர், நீர்த்த சுண்ணாம்பு தூள், பினாயில் மற்றும் B.T பவுடர்கள் ஆகிய கிருமிநாசினிகள் தமிழ்நாடு மல்டிபர்பஸ் இன்ட்கோ சர்வ், திருச்சி என்ற நிறுவனத்திடம் கொள்முதல் செய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ.5.00 லட்சத்திற்கு மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதியும், பொது சுகாதார பணியின் அத்தியாவசிய கருத்தில் கொண்டு தமிழ்நாடு மல்டிபர்பஸ் இன்ட்கோ சர்வ், திருச்சி என்ற நிறுவனத்திடம் கொள்முதல் செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 2236 /2023/H1)

## பொருள் எண். 15

அரசு முதன்மை செயலர் சென்னை அவர்களின் தலைமையில் மாவட்ட ஆட்சியர் கள்ளக்குறிச்சி அலுவலகத்தில் கடந்த 19.09.2023 அன்று காணொலி காட்சியின் மூலம் வடகிழக்கு பருவமழை தொடர்பாக நடைபெற்ற ஆய்வு கூட்டத்தில் தற்போது வடகிழக்கு பருவமழை தொடங்க உள்ளதால் மழைநீர் தேங்கும் இடங்களை நீர் இரைக்கும் இயந்திரத்தினை கொண்டு மழைநீர் வெளியேற்றவும், நகரப்பகுதியில் மரங்கள் விழுவதை உடனடியாக அப்புறப்படுத்தவும், அப்பணிகள் மேற்கொள்ளும் போது சாலையோர பாதுகாப்பு உபகரணங்கள் கொண்டு பணிகள் மேற்கொள்ளவும், அடிப்படை தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மற்றும் பணியாளர்களுக்கு பாதுகாப்பு உபகரணங்கள், தளவாட சாமான்கள் போதிய அளவில் இருப்பில் வைத்து கொண்டு போர்கால அடிப்படையில் பணிகள் மேற்கொள்ள வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி மேற்கண்ட பணிகள் மேற்கொள்ள இந்நகராட்சி பொது சுகாதார பிரிவிற்கு தேவையான மரம் வெட்டும் இயந்திரம், நீர் இறைக்கும் இயந்திரம், டார்ச்லைட், பணியாளர்களுக்கு பாதுகாப்பு உபகரணங்கள் மற்றும் தளவாடசாமான்கள் தமிழ்நாடு மல்டிபர்பஸ் இன்ட்கோ சர்வ், திருச்சி என்ற நிறுவனத்திடம் கொள்முதல் செய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ.5.00 லட்சத்திற்கு மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:–

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதியும், பொது சுகாதார பணியின் அத்தியாவசிய கருத்தில் கொண்டு தமிழ்நாடு மல்டிபர்பஸ் இன்ட்கோ சர்வ், திருச்சி என்ற நிறுவனத்திடம் கொள்முதல் செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 2235 /2023/H1)

**பொருள் எண். 16**

கள்ளக்குறிச்சி நகராட்சி பகுதியில் திடக்கழிவு மேலாண்மை திட்ட பணிகள் மேற்கொள்ள 3 நுண்உரமையங்கள் (MCC) செயல்பட்டு வருகிறது. இவ்மையங்களில் தினசரி சேகரமாகும் குப்பைகளை கொண்டு உரமாக்கும் பணிகளும், மக்காத மறுசுழற்சிக்கு பயன்படுத்த இயலாத கழிவுகளை சிமெண்ட் நிறுவனத்திற்கு கொண்டு சென்று இறுதியாக்கம் செய்யப்பட்டு வருகிறது. மேலும், தினசரி பெறப்படும் குப்பைகளை MCC வளாகத்தில் எடை இயந்திரங்களின் மூலமாக குப்பையின் அளவு குறிக்கப்பட்டு பெறப்பட வேண்டும். ஆனால், MCC வளாகத்தில் எடை இயந்திரங்கள் ஏதும் இல்லாமல் உள்ளது. இதனால் குப்பையின் அளவுகளை குறிப்பதற்கு வழிவகை இல்லை. ஒப்பந்ததாரர் வெளியில் உள்ள தனியார் எடை இயந்திரங்களின் வாயிலாக குப்பைகளின் அளவு கணக்கீடு செய்யப்பட்டு வருவதால் உண்மை தன்மை அறிய இயலவில்லை. ஆகவே, நகராட்சிக்கு சொந்தமான மூன்று நுண்உரமையங்களிலும் சிறிய அளவில் எடை இயந்திரங்கள் புதியதாக கொள்முதல் செய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ.50000/– க்கு மன்றப்பொருள் வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:–

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதியும், பொது சுகாதார பணியின் அத்தியாவசிய கருத்தில் கொண்டு உள்ளூர் விலைப்புள்ளி கோரி பணிகள் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 2116 /2023/H1)

**நகர் மன்ற தலைவர்**
**கள்ளக்குறிச்சி நகராட்சி**